**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 733/2023**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தராஜ் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 15th, 2025.

**(1 மற்றும் 2ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. 3ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி காவல் நிலையத்தில் தனிப்பிரிவு தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் ஆலங்குளம் காவல் நிலையத்தில் 2ம்நிலை காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 25.05.2018ம் தேதி, பகல் 11.00 மணியளவில் தூத்துக்குடி மாவட்டம், ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக சட்ட ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்க ஆலங்குளம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நானும், உதவி ஆய்வாளர் முகைதீன் அப்துல்காதர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன், காவலர் முருகேசன் ஆகியோர் சகிதம் ரோந்து வந்தபோது, ஆலங்குளம் பேருந்து நிலையம் அருகேயுள்ள காமராஜர் சிலை அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்றுகொண்டிருந்த பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து

கொண்ட எதிரிகள் முருகன், மூர்த்தி, ஸ்ரீதரன் ஆகிய எதிரிகளை விசாரித்தபோது, அவர்கள் எங்களைப் பார்த்து "இந்த போலீஸ்கார தேவடியா மகன்களுக்கு இதே வேலையாக போய்விட்டது. இவர்களை வெட்டி கொன்றால் தான் நிம்மதியாக இருக்க முடியும்" என்று சொல்லி எதிரி முருகன் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து உதவி ஆய்வாளர் முகைதீன் அப்துல்காதரை வெட்ட முயற்சித்தார். அவர் விலகிக்கொண்டதால் அவர் மீது வெட்டு படவில்லை. அவர் மீது வெட்டு பட்டிருந்தால் அவரின் தலை துண்டாகி இறந்திருப்பார். எதிரி மூர்த்தி என்பவர் அவர் மறைத்து வைத்திருந்த அரிவாளை வைத்து சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவரை அரிவாளால் வெட்ட முயற்சித்தார். அவர் விலகிக்கொண்டார். உடனே, அங்கிருந்த போலீஸ்காரர்களாகிய நாங்களும், அங்கிருந்த பொதுமக்களும் அவர்களை பிடிக்க முயற்சித்த போது, அவர்கள் கையில் வைத்திருந்த அரிவாளை அவர்களின் தலைக்கு மேல் சுற்றி "யாராவது எங்களை பிடிக்க வந்தால், அவர்களை வெட்டி கொல்லாமல் விட மாட்டேன்" என்று சொன்னார்கள். அப்போது, அதை பார்த்த கடைக்காரர்கள் கடைகளை அடைத்து விட்டு போய்விட்டார்கள். அங்கிருந்த ஆட்டோ ஓட்டுநர்கள் அவர்கள் வைத்திருந்த ஆட்டோக்களை எடுத்து சென்று விட்டார்கள். பொதுமக்கள் அங்கும், இங்குமாக சிதறி ஓடினர். இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அரசு பணி தடை செய்யப்பட்டது. எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் வந்து உதவி ஆய்வாளர் புகார் மனு கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.16 17:55:40 +0530